Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | சனி, பிப்ரவரி 01, 2025 | இதழ் 294

# 2025 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் கூட்டத்தொடரின் தொடக்கத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆற்றிய உரை




சென்னை, 01 பிப்ரவரி 2025: பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பு நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி செய்தியாளர்களிடையே உரையாற்றினார். செல்வத்தின் தேவதையான லட்சுமி தேவிக்கு மரியாதை செலுத்துவதாக கூறிய பிரதமர், இன்று பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கும் முக்கிய நாளில், லட்சுமி தேவியை நினைவு கூருவது வழக்கம் என்று கூறினார். இந்தியாவின் ஏழை மற்றும் நடுத்தர வர்க்க மக்கள் ஒவ்வொருவருக்கும் பிரத்யேகமான ஆசீர்வாதங்களை அளிக்குமாறு அவர் லட்சுமி தேவியை வேண்டிக் கொள்வதாகத் தெரிவித்தார்.

இந்தியா குடியரசாக மலர்ந்து 75 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதை நினைவுபடுத்திய பிரதமர், இது ஒவ்வொரு குடிமகனுக்கும் பெருமையான விஷயமாக மட்டுமல்லாமல், ஜனநாயக உலகில் முன்னணியில் இந்தியாவின் சக்தியையும் முக்கியத்துவத்தையும் பறைசாற்றுகிறது என்று கூறினார்.

மூன்றாவது முறையாக அரசை அமைப்பதற்கான பொறுப்பைத் தம்மிடம் ஒப்படைத்த மக்களுக்குத் தமது நன்றியை தெரிவித்துக் கொண்ட பிரதமர், இது தமது மூன்றாவது ஆட்சியின் முழுமையான முதல் பட்ஜெட் கூட்டத்தொடராக இருப்பதாகக் கூறினார்.

2047-ம் ஆண்டில், இந்தியா தனது 100-வது சுதந்திர தின ஆண்டைக் கொண்டாடும் போது, ஒரு முழுமையான முன்னேற்றம் அடைந்த நாடாக இருக்கும் என்ற உறுதியை அவர் வெளிப்படுத்தினார்.

இந்தக் கூட்டத்தொடர் இந்தியாவின் 140 கோடி மக்கள் அனைவருக்கும் புதிய நம்பிக்கையையும் ஆற்றலையும் அளிக்கும் என்றும், அனைவரும் ஒற்றுமையாக இந்த இலக்கை நிறைவேற்றுவார்கள் என்றும் அவர் கூறினார். தமது மூன்றாவது ஆட்சிக் காலத்தில், நிலப்பரப்பு, சமூகம், பொருளாதாரம் ஆகிய எல்லா நிலைகளிலும் முழுமையான வளர்ச்சியை நோக்கி தீவிரமான முறையில் செயல்படுவதாக அவர் தெரிவித்தார். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான அடித்தளமாக புதிய கண்டுபிடிப்பு, அனைவரையும் உள்ளடக்கியத்தன்மை, முதலீடு ஆகியவற்றை நிரந்தரமாக வைத்துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தொடரில் பல முக்கியமான வரலாற்றுச் சட்ட மசோதாக்கள் மற்றும் முன்மொழிவுகள் விவாதிக்கப்படும். இது நாட்டின் வலிமையை அதிகரிக்க வழிவகுக்கும். குறிப்பாக, பெண்களின் மதிப்பை மீண்டும் நிலைநிறுத்துதல், ஒவ்வொரு பெண்ணுக்கும் சம உரிமை அளித்தல், சமயம் மற்றும் இன வேறுபாடுகளிலிருந்து அவர்களை விடுவித்தல் ஆகியவற்றில் முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட உள்ளன. மாற்றத்திற்கான மூன்று முக்கிய அடித்தளங்களான சீர்திருத்தம், செயல்பாடு, மாற்றம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பிரதமர் வலியுறுத்தினார். மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும் என்று கூறிய பிரதமர், மக்கள் முழுமையான பங்கேற்பு அளித்தால் மாற்றம் விரைவாக உருவாகும் என்று அவர் கூறினார்.

இந்தியா இளம் சக்தியால் நிரம்பிய நாடாக இருப்பதால், இப்போது 20-25 வயதுக்குள் இருக்கும் இளைஞர்கள், 45-50 வயதடையும்போது, ஒரு முன்னேற்றமான இந்தியாவின் மிகப் பெரிய பயனாளர்களாக இருப்பார்கள். அவர்கள் முக்கியமான அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரங்களை வகித்து, அடுத்த நூற்றாண்டுக்கு வளர்ந்த இந்தியாவை கொண்டு செல்வார்கள். தலைமுறை மாற்றத்திற்கு வழிவகுக்கும் வகையில், அவர்கள் வளர்ந்த இந்தியாவை வழிநடத்துவார்கள். 1930-40களில் விடுதலைக்குப் போராடிய இளைஞர்களைப் போன்று, தற்போதைய இளைஞர்களின் கடுமையான உழைப்பும் 25 ஆண்டுகளில் ஒரு முழுமையான இந்தியாவை உருவாக்கும் என்று பிரதமர் கூறினார். எனவே, இந்தப் பட்ஜெட் கூட்டத்தொடரில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும், குறிப்பாக இளம் உறுப்பினர்கள், இந்த வளர்ச்சிக்கான தீர்க்கமான உழைப்பில் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தொடர் நாட்டின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் என்று பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார். 2014-ம் ஆண்டுக்கு பிறகு, நாடாளுமன்ற கூட்டத்தொடர் தொடங்குவதற்கு சற்று முன்பாக வெளிநாட்டு சக்திகளின் முயற்சியால் இடையூறுகள் ஏதுமில்லாத முதல் நாடாளுமன்ற கூட்டத் தொடராக இது இருக்கும் என்று அவர் கூறினார். கடந்த 10 ஆண்டுகளாக ஒவ்வொரு கூட்டத்தொடருக்கும் முன்பாக சிலர் நாட்டில் கலவரங்களை ஏற்படுத்த முயற்சி செய்து வந்தனர். ஆனால் இந்த முறை, வெளிநாடுகளில் இருந்து எந்த விதமான இடையூறு முயற்சிகளும் இல்லாத முதல் கூட்டத் தொடராக இது அமைந்துள்ளது என்று பிரதமர் கூறினார்.




# எஸ்.பி.எம் அகாடமியின் புலனப் பதிப்பை அறிமுகப்படுத்துகிறது, குடிநீர் மற்றும் துப்புரவுத் துறை

சென்னை, 01 பிப்ரவரி 2025: ஊரகத் தூய்மை ஆய்வு (எஸ்.எஸ்.ஜி) 2024 இன் கண்டுபிடிப்புகளை மறுஆய்வு செய்யவும், பிப்ரவரியில் தொடங்கவிருக்கும் வருடாந்திர அமலாக்கத் திட்டம் 2025-26க்கான உத்திசார் திட்டமிடல் குறித்து விவாதிக்கவும் ஜல் சக்தி அமைச்சகத்தின் குடிநீர் மற்றும் துப்புரவுத் துறையானது, 22 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் பிரதிநிதிகளுடன் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தது.

இந்தக் கூட்டம் எஸ்.எஸ்.ஜி ஆய்வு முடிவுகளின் முக்கிய பரிந்துரைகள் பற்றிய நேர்மையான விவாதங்களை எளிதாக்கியது. மேம்படுத்தப்பட்ட கழிவு மேலாண்மை அமைப்புகள் உட்பட முழுமையான தூய்மையை நோக்கிய முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கான ஆதார அடிப்படையிலான அணுகுமுறையையும் உறுதி செய்கிறது.

இந்தக் கூட்டத்தின்போது எஸ்.பி.எம் அகாடமியின் புலன பதிப்பு (வாட்ஸ் அப்) அறிமுகப்படுத்தப்பட்டது. இது பயிற்சி உள்ளடக்கத்துடன் அணுகல் மற்றும் ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கான ஒரு புதுமையான முயற்சியாகும். புதுப்பிக்கப்பட்ட எஸ்.பி.எம் அகாடமி பாடத்திட்டம், ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது. கற்றலை மிகவும் நடைமுறைக்குரியதாகவும், மாறும் மற்றும் பரவலாகக் கிடைக்கக்கூடியதாகவும் மாற்றுவதற்கு ஊடாடும் கூறுகளையும் உள்ளடக்கியதாக உள்ளது.

புலனம் அடிப்படையிலான மாதிரியில் அனைத்து பயனர்களும் ஒலி, ஒளி வடிவிலும், படங்கள் வடிவிலும் பாடநெறி தொடர்பான நினைவூட்டல்களைப் பெறுகிறார்கள், இது கற்றல் செயல்முறையை மிகவும் ஈடுபாட்டுடன் மாற்றுகிறது. இந்த முன்முயற்சி அனைத்து பயனர்களும் குடிமக்களும் தங்கள் பயிற்சியை முடிப்பதற்கான விருப்பத்தை உறுதி செய்கிறது. இதற்காக 1800 1800 404 என்ற எண்ணை அழைக்கலாம் அல்லது இந்த எண்ணிற்கு புலனம் வாயிலாக செய்திகளை அனுப்பலாம்.

தற்போது இந்தி மற்றும் ஆங்கிலத்தில் கிடைக்கும் இந்த தளமானது, 100க்கு 50 மதிப்பெண்களைப் பெற்றால் பயிற்சி சான்றிதழைப் பெறவும் பயனர்களை அனுமதிக்கிறது. பாடநெறி முடிந்ததும், பயனர்கள் தங்கள் சான்றிதழ்களை நிகழ்நேரத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். திறன் மேம்பாட்டு முயற்சிகளை வலுப்படுத்தி, பயிற்சி பெற்ற தூய்மை பாரத இயக்கத்தின் மனிதவளத்தின் சரிபார்க்கப்பட்ட தரவுத்தளமாக மாறுவதற்கான ஆற்றலையும் எஸ்.பி.எம் அகாடமி கொண்டுள்ளது. இந்த முயற்சியை குறித்து பேசிய குடிநீர் மற்றும் துப்புரவு துறை செயலாளர் திரு அசோக் கே.கே மீனா, புலன சேவையின் அறிமுகம், அடிமட்ட திறன் மேம்பாட்டிற்காக டிஜிட்டல் தளங்களைப் பயன்படுத்துவதற்கான அரசின் பார்வையுடன் ஒத்துப்போகிறது என்று வலியுறுத்தினார்.

# வாஷிங்டன்டி.சியில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களுக்குப் பிரதமர் இரங்கல் தெரிவித்துள்ளார்

சென்னை, 01 பிப்ரவரி 2025: வாஷிங்டன் டி.சியில் நிகழ்ந்த துயர விபத்தில் உயிரிழந்தவர்களுக்குப் பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ள அவர், அமெரிக்க மக்களுடன் நாங்கள் துணை நிற்கிறோம் என்றும் கூறியுள்ளார்.

இது தொடர்பாக சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது;

"வாஷிங்டன் டி.சி.யில் நடந்த துயரமான விபத்தில் நேரிட்ட உயிரிழப்பை அறிந்து மிகுந்த வருத்தம் அடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அமெரிக்க மக்களுடன் சேர்ந்து நாங்கள் துணை நிற்கிறோம்.

# இந்தியாவின் கடல்சார் வலிமைக்கு பெண்களின் தனித்துவமான பங்களிப்பு அவசியம்: சாந்தனு தாக்கூர்




சென்னை, 01 பிப்ரவரி 2025: இந்தியாவின் கடல்சார் வலிமையில் பெண்களின் தனித்துவமான பங்களிப்பு அவசியம் என்று கப்பல் போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் இணை அமைச்சர் திரு சாந்தனு தாக்கூர் தெரிவித்துள்ளார். பெண்கள் கடலோரப் பாதுகாப்புப் பணிகளில் தன்னம்பிக்கையுடனும் சிறப்புடனும் செயல்பட்டு உலகளவில் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மும்பையில் உள்ள இந்திய கப்பல் கழகத்தில் பணியாற்றுபவர்கள் நலன்களைக் கருத்தில் கொண்டு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் நிதியுதவித் திட்டம் ஆகியவற்றின் அதிகாரப்பூர்வ இலட்சினைகளையும் கருப்பொருள்களையும் வெளியிட்ட அவர், நீண்ட காலம் குடும்பத்திலிருந்து விலகி கடலில் பணியாற்றும் பெண்கள் தேவையான மரியாதையைப் பெற வேண்டும் என்ற நோக்குடன் இது போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

யோகக்கலை இந்திய பாரம்பரியத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார். கடற்பகுதிகளில் பல்வேறு பிரச்சனைகளை மாலுமிகள் எதிர்கொள்வதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் கடல்சார் பாதுகாப்பில் உறுதியான முன்னேற்றத்தை உலக அரங்கில் எடுத்துக்காட்டும் வகையில் முக்கிய தூதுவர்களாக அவர்களை உருவாக்குவதே இத்தகைய திட்டங்களின் நோக்கமாகும் என்று அவர் தெரிவித்தார்.

கடல்சார் இந்தியா குறித்த தொலைநோக்குப் பார்வை 2030 என்ற பிரதமரின் திட்டத்தை செயல்படுத்துவதற்கான முயற்சி இது என்று அவர் குறிப்பிட்டார்.

"கடல்சார் யோகா" திட்டம் கப்பலில் பணியாற்றுபவர்கள் உடல் மற்றும் மன நலத்தை மேம்படுத்த உதவும். கடல்பணிக்கு முன்னதாக அல்லது கடல் பணியின் போதோ அல்லது அதற்குப் பின்னரோ யோகக் கலையை பின்பற்றுவதன் மூலம் அவர்களது மன மற்றும் உடல்நலங்கள் மேம்படுகிறது என்று கூறினார்.

# தனிஷ்க் வைரங்களின் திருவிழாவான 'ஃபெஸ்டிவல் ஆஃப் டயமண்ட்ஸ்'ஸை கொண்டாடுகிறது!



சென்னை, 01 பிப்ரவரி 2025: நவீன இந்தியப் பெண்ணின் சுதந்திர உணர்வுக்கு கௌரவமளிக்கும் வகையில் அன்பௌண்ட்' என்னும் தனது சமீபத்திய இயற்கை வைர நகைத் தொகுப்பையும் தனிஷ்க் வெளியிட்டுள்ளது"

டாடா குழுமத்தைச் சேர்ந்த, இந்தியாவின் மாபெரும் ஆபரண சில்லறை பிராண்டாகிய தனிஷ்க், இந்த ஆண்டு வைரத் திருவிழாவான 'ஃபெஸ்டிவல் ஆஃப் டயமண்ட்ஸ்'-ஐ சேர்ந்து கொண்டாட உங்களை அன்புடன் அழைக்கிறது. தனது சமீபத்திய அறிமுகத்துடன் "எந்தத் தருணத்தையும் ஜொலிஜொலிப்புடன் பிரகாசிக்க வைப்பது - உங்களது தருணம், உங்களது ஜொலிஜொலிப்பு" [மொகெகிங் எனி மொமென்ட் ஸ்பார்கில் - யுவர் மொமென்ட், யுவர் ஸ்பார்கில்] என்ற எண்ணத்தை மீண்டுமொருமுறை பிராண்டு வலியுறுத்துகிறது.

உங்களது சிறப்பான நாட்களில் தனிஷ்க் வைரங்கள் அற்புதமாக ஜொலித்திருக்க, சாதாரண நாட்களிலும் அவை உங்களுக்கு உறுதுணையாக இருந்து உங்களது உணர்வை மேம்படுத்தி, நம்பிக்கையை பெருக்கி, ஒவ்வொரு நாளையும் அதிக ஸ்டைலாகவும் பிரகாசமாகவும் ஆக்கி விடும்.

ஆர்வத்தை மேலும் தூண்டும் விதமாக, அற்புதமான நளினம் மற்றும் ஸ்டைலுடன் கூடிய, ஒவ்வொரு நிகழ்வையும் மேம்படுத்தும் 'அன்பௌண்ட்' என்னும் தனது சமீபத்திய இயற்கை வைர நகைத் தொகுப்பினையும் தனிஷ்க் அறிமுகப்படுத்தியுள்ளது.

தனிஷ்க்கின் சமீபத்திய இயற்கை வைர நகைத் தொகுப்பான அன்பௌண்ட் நவீன இந்தியப் பெண்ணின் சுதந்திர உணர்வுக்கு கௌவரமளிக்கும் வகையில், அவளது தனித்துவத்தையும் அவள் வாழும் பன்முகத்தன்மையுள்ள வாழ்க்கையையும் கொண்டாடும் விதமாக அமைந்துள்ளது. இந்த நகைத் தொகுப்பிலுள்ள ஒவ்வொரு ஆபரணமும் அவளது நளினம், வலிமை மற்றும் அவளின் ஆளுமையை வரையறுக்கும் அவளது பிரத்தியேகப் பயணத்தைப் பிரதிபலிக்கின்றன.

அழகிய 1சிதி - 3சிதி வைரங்களை 18கேதி தங்கத்துடன் சேர்த்து உருவாக்கப்பட்ட இந்த நகைத் தொகுப்பில் பெண்களின் நளினத்திற்கேற்றபடி இயற்கையாக அசைந்தாடும் வடிவமைப்பு, அவளது தனித்துவமான அழகியல் அம்சங்களைக் குறிப்பதாக அமைந்துள்ளது. கழுத்துக்கான ஆபரணங்கள், ஒவ்வொரு பெண்ணும் தன்னை ஜொலிக்க வைக்க விரும்பும் பெண்டன்ட் செட்டுகள், காக்டெய்ல் மோதிரங்கள், காதணிகள் இதில் அடங்கியுள்ளன.

இந்த ஆபரணங்கள் இயற்கை வைரங்கள், எனாமல், வண்ணக் கற்களால் செய்யப்பட்டுள்ளதால் அவற்றின் ஸ்டைலான தோற்றத்தை உறுதிசெய்கின்றன. அன்றாடப் பயன்பாட்டுக்கென டிசைன் செய்யப்பட்டுள்ள இந்த ஆபரணங்கள் சாதாரணப் பயன்பாடு முதல் சிறப்பு நிகழ்வுகள் வரை அவளின் தனித்தன்மை, தன்னை வெளிப்படுத்தும் பாங்கைக் கொண்டாடும் விதமாக உள்ளன. ஜனவரி 09, 2025 முதல் அற்புதமான இயற்கை வைர ஆபரண மதிப்பில் 20% வரை* தள்ளுபடி [அப் டு 20% ஆஃப் ஆன் எக்ஸ்க்யுசைட் நேச்சுரல் டையமண்ட் ஜூவெல்லரி வேல்யு] தரும் தனிஷ்க்கின் வைரங்களின் திருவிழாவான 'ஃபெஸ்டிவல் ஆஃப் டயமண்ட்ஸ்' உடன் இந்த ஆண்டைக் கொண்டாடுங்கள்.

மேலும் வாடிக்கையாளர்கள் தமது பழைய தனிஷ்க் வைர ஆபரணங் களையும் தற்போதைய 100% எக்ஸ்சேஞ்ச் மதிப்பில் பரிமாற்றம் [எக்ஸ்சேஞ்ச் தெயர் ஓல்டு தனிஷ்க் டையமண்ட் ஜூவல்லரி அட் 100% கரன்ட் எக்ஸ்சேஞ்ச் வேல்யு] செய்து பிரமிக்க வைக்கும் புதிய டிசைனை வாங்கலாம்.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள மாடுலர் வைர நகைகளின் கேப்ஸ்யூல் கலெக்ஷன் ஆபரணங்கள் பன்முகத்தன்மையுடன் அழகாக இருப்பதால் எப்படி வேண்டுமானாலும் அணிந்து கொள்ளலாம். சமீபத்திய அறிமுகத்துடன் நளினத்தை பிராண்ட் மறுவரையறை செய்துள்ளதால் ப்ரஞ்ச் முதல் ஆடம்பர டின்னர் வரை அனைத்து நிகழ்வுகளுக்கும் ஸ்டைல் தேர்வுக்கும் இந்த ஆபரணங்கள் பொருத்தமாக அமையும். மணமகளுக்காகவோ பிடித்தமான ஒருவர் போற்றும் சரியான பரிசுக்காக ஷாப்பிங் செய்யவோ நீங்கள் விரும்பினால் நகைகளுடன் கூடிய, ரூ.15,000-இல் இருந்து தொடங்கும் தனிஷ்க்கின் இயற்கை வைர ஆபரண தொகுப்பை கொண்டாட இந்த வைரங்களின் திருவிழா மிகப் பொருத்தமான வாய்ப்பாக அமையும். ஒவ்வொரு ஜொலிப்பும் ஒரு கதையைச் சொல்லும்படி அமைந்துள்ள தனிஷ்க்கின் 'ஃபெஸ்டிவல் ஆஃப் டயமண்ட்ஸ்' உடன் இந்தப் புத்தாண்டைக் கொண்டாடி மகிழுங்கள்.

உங்கள் அருகில் உள்ள தனிஷ்க் விற்பனை நிலையத்திற்கு வருகை புரிந்து இந்த அற்புதமான 'வைரங்களின் திருவிழாவை' அனுபவியுங்கள் (அ) வசதியாக வீட்டில் அமர்ந்து கொண்டே https://www.tanishq.co.in/festival-of-diamond?lang=en_IN என்ற எமது இணையதளம் மூலமாக ஷாப்பிங் செய்யுங்கள்!

# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு. செல்வப்பெருந்தகை, எம்எல்ஏ அவர்கள் விடுக்கும் அறிக்கை - 30.1.2025



சென்னை, 01 பிப்ரவரி 2025: கடந்த டிசம்பர் 17 அன்று இந்திய நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, சட்டமாமேதை டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களை மிகமிக இழிவாகப் பேசியதோடு, காங்கிரஸ் கட்சியைப் பற்றி ஆதாரமற்ற அவதூறுகளை கூறியிருந்தார். டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அரசியல் நிர்ணயசபை உறுப்பினராக தேர்வு பெற்று, அரசமைப்புச் சட்ட வரைவுக் குழு தலைவராக பொறுப்பேற்று, 60க்கும் மேற்பட்ட நாடுகளின் அரசியலமைப்புச் சட்டத்தை ஆராய்ந்து, இந்தியாவில் உள்ள சாதி, மத, வேறுபாடுகளை கடந்து, இன்றைக்கும் பட்டியலின, சிறுபான்மையின, பின்தங்கிய மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய, பாதுகாப்பு கவசமாக, இன்றும் உலகமே போற்றுகின்ற வகையில் அரசமைப்பு சட்டத்தை உருவாக்கினார்.

அம்பேத்கர் அவர்களுக்கு பெருமை சேர்ப்பது அவர் உருவாக்கிய அரசமைப்புச் சட்டம் தானே தவிர, அரசியல் ஆதாயத்தோடு பிரதமர் மோடி அமைக்கிற எந்த நினைவுச் சின்னங்களும் அல்ல.

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களை நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக அவமதித்து பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷா, நாளை (31.01.2025) வெள்ளிக்கிழமை மாலை சென்னை வருகிறார். தமிழகத்தின் ஒட்டுமொத்த எதிர்ப்பையும், கண்டனத்தையும் வெளிப்படுத்துகிற வகையில் நாளை சென்னைக்கு வரும் அமித்ஷாவுக்கு கருப்புக் கொடி காட்டி எதிர்ப்பு தெரிவிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

# பேரறிஞர் அண்ணா 56வது நினைவு நாள் மாண்புமிகு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் பிப்.3 அன்று அமைதிப் பேரணி

**மாவட்டக் கழகத் தோழர்களுக்கு சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!**


சென்னை, 01 பிப்ரவரி 2025: காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் - தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும்


தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் - "மெட்ராஸ் ஸ்டேட்" என்ற பெயரை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதை சுடரொளி - சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் - எழுத்து வேயதர் - தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் - பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளினையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலை மையில் கழகப் பொதுச் செயலாளர் மாண்புமிகு துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் கழக முன்னணியினர் பிப்ரவரி - 3, திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்கள்.

இந்த அமைதிப் பேரணி வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடையும்.

கழக இந்நாள் - முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நல உரிமைப் பிரிவு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் அண்ணன் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம். நாள் : 31-01-2025. சென்னை மாவட்ட தி.மு.க.

# மீன்பிடி துறைமுகம் பகுதியில் நடந்து சென்ற நபரிடம் கத்தியை காட்டி மிரட்டி பணம் பறித்த 2 நபர்கள் கைது.





சென்னை, 01 பிப்ரவரி 2025: சென்னை, காசிமேடு, சிங்காரவேலர் நகர் 12வது தெருவில் வசித்து வரும் விஜயன், வ/69, த/பெ. வைத்திலிங்கம் என்பவர் காசிமேடு கடலோரத்தில் உள்ள படகில் மீன்பிடி தொழில் செய்து வருகிறார். விஜயன் 30.01.2025 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் காசிமேட்டில் உள்ள நாகூரான் தோட்டம் மீன் மார்க்கெட் அருகே நடந்து சென்று கொண்டிருந்த போது, 4 நபர்கள் விஜயனை வழிமறித்து கத்தியை காட்டி மிரட்டி தகாத வார்த்தையில் பேசி மேற்படி விஜயன் பாக்கெட்டில் இருந்த பணம் ரூ.500/-ஐ பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டனர். இது குறித்து விஜயன் என்-4 மீன்பிடி துறைமுக காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

என்-4 மீன்பிடி துறைமுகம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.சுபாஷ், வ/20, த/பெ.திருமலை, திடீர் நகர் 2வது தெரு, தண்டையார்பேட்டை, சென்னை. 2.நிர்மல், வ/19, த/பெ.சத்யராஜ், திடீர் நகர் 4வது தெரு, புது வண்ணாரப் பேட்டை, சென்னை ஆகிய இருவரை கைது செய்தனர். விசாரணையில் எதிரி சுபாஷ் மீது ஏற்கனவே 1 அடிதடி வழக்கு உட்பட 3 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் 30.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப் பட்டனர். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய 2 நபர்களை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# சாம்சங் ஏசி லைன்அப் லான்ச் 2025




சென்னை, 01 ஜனவரி 2025: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங், இன்று அதிநவீன ஏஐ தொழில்நுட்பம் மற்றும் பிரீமியம் வடிவமைப்பின் கலவையான பீஸ்போக் ஏஐ விண்ட்ஃப்ரீ ஏர் கண்டிஷனர்களின் 2025 வரிசையை அறிமுகப்படுத்தியது. புத்திசாலித்தனமான குளிரூட்டல், ஆற்றல் திறன் ஈற்றும் இணைக்கப்பட்ட வாழ்க்கை ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம், புதிய 19 மாடல்கள் இந்திய நுகர்வோரின் வளர்ந்து வரும் தேவைகளை பூர்த்தி செய்கின்றன. இந்த ஏர் கண்டிஷனர்கள் இந்தியாவின் தீவிர கோடைகாலத்தின் சவால்களைச் சமாளிக்கும் அதே வேளையில் ஆறுதல், வசதி மற்றும் புதுமையை வழங்குவதற்காக சிந்தனையுடன் ' டிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த வரம்பு ஏஐ-உந்துதல் புதுமைகளை மாறுபட்ட காலநிலை நிலைமைகளுக்கு தடையின்றி மாற்றியமைக்கிறது, நிலையான ஆறுதல் மற்றும் அதிகபட்ச செயல்திறனை உறுதி செய்கிறது. விண்ட்ஃப்ரீல் கூலிங் தொழில்நுட்பம் நேரடி வரைவுகளை நீக்குகிறது, 23,000 மைக்ரோ துளைகள் வழியாக காற்றை மெதுவாக சிதறடிக்கிறது, அதே நேரத்தில் ஏஐ ஃபாஸ்ட் & கம்ஃபோர்ட் கூலிங் அம்சம் இடத்தை விரைவாக குளிர்விக்கிறது மற்றும் நீடித்த ஆறுதலுக்காக ஆற்றல் திறன் கொண்ட அமைப்புகளுக்கு புத்திசாலித்தனமாக மாறுகிறது. நவீன வாழ்க்கை முறைகளை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்ட இந்த வரம்பு ஸ்மார்ட்திங்க்ஸ் இணைப்பை உள்ளடக்கியது, தொலைநிலை கண்காணிப்புக்கான வரைபடக் காட்சி மற்றும் சிரமமின்றி கட்டுப்படுத்துவதற்கான விரைவான ரிமோட் போன்ற மேம்பட்ட அம்சங்களை வழங்குகிறது.

வீட்டிலிருந்து வேலை செய்யும் தலைமுறையினரின் வாழ்க்கையில் அதிக வசதியைச் சேர்க்கும் வகையில், பீஸ்போக் ஏஐ விண்ட்ஃப்ரீ ஏசிகள் வை-பை ஐப் பயன்படுத்தி சாம்சங்கின் ஸ்மார்ட்திங்க்ஸ் பயன்பாட்டுடன் தடையின்றி இணைகின்றன, இது பிக்ஸ்பை குரல் உதவியாளர், அலெக்சா மற்றும் கூகுள் ஹோம் ஐப் பயன்படுத்தி அமைப்புகளை மாற்ற அல்லது ஆன்/ஆஃப் செய்ய உங்களை அனுமதிக்கிறது. நீங்கள் ஸ்மார்ட் ஏஐ ஆட்டோ கூலிங் மூலம் குளிரூட்டலை மேம்படுத்தலாம் மற்றும் ஜியோ-ஃபென்சிங் அடிப்படையிலான வெல்கம் கூலிங் அம்சத்துடன் வீட்டை அடைவதற்கு முன்பே அறையை தானாகவே குளிர்விக்கலாம். புதிய 'குட் ஸ்லீப்' பயன்முறையுடன் இயக்கப்படும் இந்த ஏசிக்கள் தூக்க நிலைகளுக்கு ஏற்ப வெப்பநிலையை சரிசெய்வதன் மூலம் இரவு முழுவதும் இனிமையான தூக்கத்தை ஊக்குவிக்கின்றன.

"2025 பெஸ்போக் ஏஐ விண்ட்ஃப்ரீல் ஏர் கண்டிஷனர்களுடன் இந்திய கோடைகாலத்தின் தனித்துவமான சவால்களை எதிர்கொள்ளும் அதே வேளையில், வீட்டு குளிரூட்டும் அனுபவத்தை மறுவரையறை செய்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த ஏர் கண்டிஷனர்கள் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்தும் புதுமைகளுக்கான சாம்சங்கின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். ஏஐ-உந்துதல் குளிரூட்டல் மற்றும் ஆற்றல் திறன், ஸ்மார்ட் இணைப்பு மற்றும் வாழ்க்கை முறையை மேம்படுத்தும் அம்சங்களை இணைப்பதன் மூலம், இந்த வரம்பு இந்திய நுகர்வோருக்கு சக்திவாய்ந்த ஏஐ தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை கொண்டுவருகிறது" என்று சாம்சங் இந்தியாவின் டிஜிட்டல் உபகரணங்களின் மூத்த இயக்குனர் குஃப்ரான் ஆலம் கூறினார்.

சாம்சங் இந்திய ஏர் கண்டிஷனர் சந்தையில் ஒரு நட்சத்திர ஆண்டைக் கொண்டுள்ளது, வலுவான விற்பனை மற்றும் வலுவான வேகம் 2025 ஆம் ஆண்டில் செல்கிறது. அதன் பீஸ்போக் ஏஐ விண்ட்ஃப்ரீ வரிசையை அறிமுகப்படுத்துவதன் மூலம், நிறுவனம் ஏசி துறையில் ஏஐ-உந்துதல் புரட்சியை வழிநடத்த தன்னை நிலைநிறுத்துகிறது. ஆற்றல் பயன்பாட்டை மேம்படுத்தும் மற்றும் பயனர் அனுபவத்தை மேம்படுத்தும் ஸ்மார்ட் ஏஐ அம்சங்களை ஒருங்கிணைப்பதன் மூலம், இந்த புதிய வரம்பு சந்தையில் சாம்சங்கின் இருப்பை உயர்த்தும்.

ஏஐ-உந்துதல் குளிரூட்டல் மற்றும் ஆற்றல் திறன் பீஸ்போக் ஏஐ விண்ட்ஃப்ரீ ஏசிகள் குளிரூட்டும் செயல்திறனை மறுவரையறை செய்ய அதிநவீன ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன. ஏஐ எனர்ஜி பயன்முறையானது 30% ஆற்றலைச் சேமிக்க குளிரூட்டும் அமைப்புகளை புத்திசாலித்தனமாக சரிசெய்கிறது. இது ஏர் கண்டிஷனரை வாங்கும் போது நுகர்வோருக்கான முக்கிய வாங்கும் காரணியை நிவர்த்தி செய்கிறது - வசதியில் சமரசம் செய்யாமல் ஆற்றல் திறன் கொண்ட சாதனங்களுக்கான தேவை.

ஏஐ ஃபாஸ்ட் & கம்ஃபோர்ட் கூலிங் அம்சம் அதிகபட்ச விசிறி வேகத்துடன் அறை வெப்பநிலையை விரைவாகக் குறைப்பதன் மூலம் உடனடி நிவாரணத்தை உறுதி செய்கிறது. விரும்பிய வெப்பநிலையை அடைந்ததும், சீரான குளிரைப் பராமரிக்க கணினி புத்திசாலித்தனமாக விண்ட்ஃப்ரீல் பயன்முறைக்கு மாறுகிறது, தூங்குவது அல்லது விருந்தினர்களை மகிழ்விப்பது போன்ற நடவடிக்கைகளுக்கு வசதியான சூழலை உறுதி செய்கிறது.

# டங்ஸ்டன் திட்டம் ரத்துக்கு பிரதமர் மோடியின் நடவடிக்கையே காரணம்

## பாராட்டு விழாவில் மத்திய அமைச்சர் கிஷன்ரெட்டி பேச்சு



சென்னை 01, பிப்ரவரி 2025 : "டங்ஸ்டன் திட்டம் ரத்துக்கு பிரதமர் மோடியின் நடவடிக்கையே காரணம்" என்று அ.வல்லாளப்பட்டியில் நடந்த பாராட்டு விழாவில் மத்திய அமைச்சர் கிஷன்ரெட்டி பேசினார்.

மதுரை மாவட்டம் மேலூர் அருகே அரிட்டாபட்டி, நரசிங்கம்பட்டி, அ.வல்லாளப்பட்டி உள்பட பல்வேறு கிராமங்களில் 5 ஆயிரம் ஏக்கரில் டங்ஸ்டன் கனிம சுரங்கம் அமைக்க மத்திய அரசு ஏலம் விட்டு இருந்தது.

இந்த திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என மேலூரை சுற்றி உள்ள பல்வேறு கிராம மக்கள் கோரிக்கைகள் விடுத்து போராட்டங்கள் நடத்தியதை தொடர்ந்து, கடந்த 10-ந்தேதி அ.வல்லாளப்பட்டிக்கு வந்த பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை, டங்ஸ்டன் திட்டத்தை மத்திய அரசு அனுமதிக்காது என உறுதி அளித்தார்.

மேலும், கிராம பிரதிநிதிகளை, டெல்லி அழைத்துச்சென்று மத்திய சுரங்க மந்திரி கிஷன் ரெட்டியை சந்திக்க ஏற்பாடு செய்தார். அங்கு நடத்த பேச்சுவார்த்தைக்கு பின்னர், டங்ஸ்டன் ஏலம் ரத்து செய்யப்படுவதாக மத்திய அமைச்சர் அறிவித்தார்.

இதனை தொடர்ந்து மத்திய அரசு மற்றும் மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டி, பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கும் விழா அ.வல்லாளப்பட்டியில் நேற்று நடந்தது.

இதற்காக டெல்லியில் இருந்து மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டி நேற்று விமானத்தில் புறப்பட்டு மதியம் 3 மணி அளவில் மதுரை வந்தார். அவருடன் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலையும் வந்தார். அவர்களுக்கு, மேலூரை சுற்றியுள்ள கிராம மக்கள் மற்றும் பா.ஜ.க.வினர் சார்பில் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து காரில் புறப்பட்ட அவர்களுக்கு, அழகர்கோவில் பகுதியில் வைத்து கிராம மக்கள் வரவேற்பு அளித்தனர். இதனை தொடர்ந்து அ.வல்லாளப்பட்டி பகுதியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்து கொண்டனர்.

இதில், மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டி பேசியதாவது:-

பிரதமர் மோடி தமிழக மக்கள் மீது அளவில்லா அன்பு வைத்துள்ளார்.

உலகம் முழுவதும் சென்று, தமிழர்களின் பெருமையை பறைசாற்றி வருகிறார்.

இப்பகுதியில் டங்ஸ்டன் கனிமச்சுரங்கம் அமைக்கக்கூடாது என்று கிராம மக்கள் டெல்லியில் என்னை சந்தித்தனர்.

அப்போது பிரதமரிடம் இந்த விவகாரம் பற்றி எடுத்துக்கூறி திட்டம் ரத்து செய்யப்படும் என்று தெரிவித்தேன் இந்த திட்டம் ரத்து செய்யப்பட்டதற்கு பிரதமர் மோடியின் நடவடிக்கையே காரணம்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து கிஷன் ரெட்டிக்கு கிராம மக்கள் சார்பில் கள்ளழகர் சிலை நினைவுப்பரிசாக வழங்கப்பட்டது. அண்ணாமலை, ராம.சீனிவாசன் உள்ளிட்ட பா.ஜ.க. தலைவர்களும் கவுரவிக்கப்பட்டனர்.

டங்ஸ்டன் திட்டம் ரத்து தொடர்பான மத்திய அரசின் அரசாணை கல்வெட்டாக வைக்கப்பட்டு இருந்தது. அந்த கல்வெட்டை மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டி, அண்ணாமலை ஆகியோர் திறந்து வைத்தனர். இதே போல் அரிட்டாபட்டியிலும் பாராட்டு விழா நடந்தது.

# ஆவடி 'ஓசிஎப்' தொழிற்சாலையில் இருந்து தென் அமெரிக்க ராணுவ உடைகள் ஏற்றுமதி



சென்னை 01, பிப்ரவரி 2025 தென் அமெரிக்காவில் உள்ள 'சுரினாம்' நாட்டின் ராணுவத்துக்கு ஆவடியில் உள்ள படைத்துறை உடை தொழிற்சாலையில் (ஓசிஎஃப்) இருந்து ஆடைகள் தயாரித்து அனுப்பப்பட்டுள்ளது.

சென்னையை அடுத்த ஆவடியில் உள்ள முப்படையினருக்கான சீருடைகள் தயாரிக்கும் படைத்துறை உடை தொழிற்சாலை (ஓசிஎஃப்) இயங்கி வருகிறது. இந்தியாவில் முதல்முறையாக, இந்த தொழிற்சாலையில் இருந்து தென் அமெரிக்காவில் உள்ள சுரினாம் நாட்டின் ராணுவத்துக்கு சீருடை தயாரித்து அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான நிகழ்ச்சி ஓசிஎஃப் வளாகத்தில் நடைபெற்றது.

ஓசிஎப் பொதுமேலாளர் பி.எஸ்.ரெட்டி, கூடுதல் பொது மேலாளர் குகன் உட்பட பலர் கொடியசைத்து ஏற்றுமதி வாகனத்தை தொடங்கி வைத்தனர். செய்தியாளர்களிடம் பி.எஸ்.ரெட்டி கூறியதாவது:

படைத்துறை உடை தொழிற் சாலையில் உள்நாட்டு உற்பத்தி மட்டுமின்றி மற்ற நாடுகளின் ராணுவத்துக்கான சீருடைகளை தயாரிக்கும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது.

அதன்படி, முதற்கட்டமாக தென் அமெரிக்காவில் உள்ள சுரினாம் நாட்டுக்கு 4,500 ராணுவ உடைகள் தயாரித்து அனுப்பப்பட்டன. இதன் மதிப்பு ரூ.1.71 கோடி ஆகும்.

கடந்த ஆண்டு பாதுகாப்பு தளவாடங்களின் ஏற்றுமதி மூலம் ரூ.20,083 கோடி வருவாய் கிடைத்துள்ளது. 31 சதவீதம் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் பாதுகாப்பு துறைக்கான ஏற்றுமதி குறிப்பிட்ட வளர்ச்சியை அடைந்துள்ளது. 2029-ம் ஆண்டுக்குள் ஏற்றுமதி மூலம் ரூ.50 ஆயிரம் கோடி வருவாய் ஈட்ட மத்திய அரசு இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.



அண்ணா தி.மு.க. அமைப்புச் செயலாளர் திருத்தணி கோ. அரி மற்றும் தமிழ் வளர்ச்சித் துறையின் முன்னாள் இயக்குனர் கோ. வெற்றிவேந்தன் ஆகியோரது தந்தை செ.கா.கோவிந்தசாமி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, வெற்றிவேந்தன் எழுதிய திருக்குறள் பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கோவை, தமிழே பிற மொழிகளின் தாய், குறள் கூறும் சொல்' ஆகிய நூல்களை அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட, கழக அமைப்புச் செயலாளரும், வட சென்னை தெற்கு (கிழக்கு) மாவட்டக் கழக செயலாளருமான டி. ஜெயக்குமார் பெற்றுக்கொண்டார் திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் ஜீவா விசயராகவன் ளுடன் இருந்தார்.

# ஊரக வளர்ச்சி கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங்கின் தந்தை மறைவு: ஸ்டாலின் இரங்கல்

சென்னை 01, பிப்ரவரி 2025 :''ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடியின் தந்தையார் தர்லோச்சன் சிங் பேடி மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள பரித்கோட் அரசு கல்வியியல் கல்லூரி முதல்வராகப் பணியாற்றிய அவர், திருக்குறள் மீது மிகுந்த பற்று கொண்டவராக விளங்கினார். "மனிதர்கள் மீதான அன்பை மையப்படுத்தியதாகவே திருக்குறள் திகழ்கிறது; அதனையேதான் குருநானக்கும் பரப்புரை செய்தார்" என்று கூறிய அவர், குறளின் கருத்துகளை எடுத்துச்சொல்லும் தூதுவராக, திருக்குறளைப் பஞ்சாபி மொழியில் மொழிபெயர்த்தார். அவரது இந்தப் பணி, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மிகச் சிறந்த அறிஞராக விளங்கிய அவரது மறைவு, தமிழ்நாட்டுக்கும் பஞ்சாப் மாநிலத்திற்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும். தந்தையை இழந்து வாடும் ககன்தீப் சிங் பேடிக்கும், அவரது பிரிவால் துயருற்றுள்ள அவரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்''.

இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார். தொலைபேசியில் அழைத்து ஆறுதல் - மேலும், முதலமைச்சர் ஸ்டாலின், ககன்தீப் சிங் பேடியைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு ஆறுதல் தெரிவித்தார்.

# காவேரி மருத்துவமனை வடபழனிக்கு சர்வதேச கூட்டு ஆணையத்தின் தங்க முத்திரை அங்கீகாரம் சமீபத்திய 8வது தரநிலையை எட்டிய உலகின் முதல் மருத்துவமனை



சென்னை, 01 பிப்ரவரி 2025: காவேரி மருத்துவமனை வடபழனி, நோயாளிகளின் பாதுகாப்பு, தரமான சுகாதாரம் மற்றும் மருத்துவ நடைமுறைகளில் தொடர்ச்சியான மேம்பாடு ஆகியவற்றில் உறுதியாக செயல்பட்டதற்காக மதிப்பிற்குரிய சர்வதேச கூட்டு ஆணைய (ஜேசிஐ) அங்கீகாரத்தை பெற்றுள்ள உலகில் முதல் மருத்துவமனை என்று அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. இந்த அங்கீகாரம், மருத்துவமனையின் உயர் தரமான பராமரிப்பு மற்றும் செயல்பாட்டு சிறப்பை நிலைநிறுத்துவதற்கான அர்ப்பணிப்பை அங்கீகரிக்கிறது. இதனால் பிராந்தியத்தில் முன்னணி சுகாதார வழங்குனர்களில் ஒருவராக அதை தனித்து நிற்கச் செய்துள்ளது.

ஜே.சி.ஐ அங்கீகாரம், சுகாதாரத் துறையில் சிறந்து விளங்குவதற்கான உலகளாவிய அளவுகோலாகப் பரவலாகக் கருதப்படுகிறது. நோயாளிகள் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் நிறுவன செயல்திறன் ஆகியவற்றில் சிறந்த செயல்திறனை வெளிப்படுத்தும் சுகாதார நிறுவனங்களுக்கு வழங்கப்படும் ஒப்புதல் தங்க முத்திரையாகும். காவேரி மருத்துவமனை வடபழனி அதன் நோயாளிகளுக்கு சிறந்த விளைவுகளை வழங்குவதற்கான தொடர்ச்சியான முயற்சிகளின் அறிகுறியாகும். நோயாளி சிகிச்சை முதல் நிர்வாக நடைமுறைகள் வரை அதன் செயல்பாடுகளின் ஒவ்வொரு அம்சத்திலும் உயர்தர பராமரிப்பை பராமரிப்பதில் கவனம் செலுத்துவதால், இந்த மதிப்புமிக்க அங்கீகாரத்தை மருத்துவமனை பெற்றுள்ளது.

ஜனவரி 1, 2025 முதல் நடைமுறைக்கு வந்த மருத்துவமனைகளுக்கான ஜேசிஐ இன் 8வது பதிப்பு அங்கீகாரத் தரநிலைகளின் மிகச் சமீபத்திய திருத்தம், நவீன சுகாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்யும் நோக்கில் பல குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அறிமுகப்படுத்துகிறது. முக்கிய புதுப்பிப்புகளில் ஒரு புதிய உலகளாவிய சுகாதார தாக்க அத்தியாயத்தின் அறிமுகம் ஆகும். இது நீடித்த சுற்றுச்சூழல் மற்றும் அவர்களின் சூழலியல் தடத்தை குறைப்பதில் சுகாதார அமைப்புகளின் பங்கை வலியுறுத்துகிறது. ஒரு பிரத்யேக சுகாதார தொழில்நுட்ப அத்தியாயம், மின்னணு சுகாதார ஆவணங்களின் ஒருங்கிணைப்பு, தொலை மருத்துவ சேவைகளின் வளர்ந்து வரும் பயன்பாடு மற்றும் நோயாளியின் தரவைப் பாதுகாக்க சைபர் பாதுகாப்பின் முக்கியத்துவம் போன்ற முக்கியமான தலைப்புகளையும் குறிப்பிடுகிறது.

கூடுதலாக, திருத்தப்பட்ட தரநிலைகள் நோயாளியின் பாதுகாப்பிற்கு வலுவான முக்கியத்துவத்தை அளிக்கிறது. வெளிப்படைத்தன்மை மற்றும் தொடர்ச்சியான கற்றலை ஊக்குவிக்கும் நிகழ்வோடு தண்டனையற்ற அணுகுமுறையை பரிந்துரைக்கிறது. மற்ற குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் உறுப்பு மற்றும் திசு மாற்று திட்டங்களுக்கான மேம்படுத்தப்பட்ட நெறிமுறைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய நோயாளிகளை பராமரிப்பதற் கான பலப்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்களை உள்ளடக்கியது. பல்வேறு நோயாளி குழுக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய சுகாதார நிறுவனங்கள் தயாராக இருப்பதை உறுதி செய்கிறது.

காவேரி மருத்துவமனை வடபழனியின் ஜேசிஐ அங்கீகாரத்தின் சாதனை, இந்த கடுமையான தரநிலைகளை பூர்த்தி செய்யும் உறுதிமொழியை எடுத்துக்காட்டுகிறது. மேலும் நோயாளிகளுக்கு மிக உயர்ந்த அளவிலான பராமரிப்பை வழங்குவதற்கான அதன் அர்ப்பணிப்பை வலுப்படுத்துகிறது. நோயாளியின் விளைவுகளை மேம்படுத்துதல், மருத்துவ நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் ஒட்டுமொத்த சுகாதாரத் தரத்தை மேம்படுத்த சமீபத்திய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றில் மருத்துவமனையின் கவனத்தை இந்த சாதனை எடுத்துக்காட்டுகிறது.

காவேரி மருத்துவமனையின் இணை நிறுவனரும், நிர்வாக இயக்குநருமான டாக்டர். அரவிந்தன் செல்வராஜ், மருத்துவமனையின் சாதனை குறித்து பெருமிதம் தெரிவித்துள்ளார், "ஜேசிஐ தங்க முத்திரையின் ஒப்புதலைப் பெறுவதில் நாங்கள் உண்மையிலேயே பெருமைப்படுகிறோம். நோயாளியை மையப்படுத்திய சேவையை நாங்கள் வழங்குகிறோம் என்பதை இந்த அங்கீகாரம் நிரூபிக்கிறது. இந்த அங்கீகாரம் எங்கள் முழு குழுவின் கடின உழைப்பு மற்றும் நிபுணத்துவத்தை பிரதிபலிப்பதோடு உலகளாவிய தரத்தை தொடர்ந்து மேம்படுத்துவதற்கும் பூர்த்தி செய்வதற்கும் எங்கள் உறுதியை பலப்படுத்துகிறது. வடபழனியில் உள்ள காவேரி மருத்துவமனை நோயாளிகளின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வ தோடு மட்டுமல்லாமல், ஒவ்வொரு நோயாளிக்கும் மிக உயர்ந்த தரத்தை வழங்குவதில் நாங்கள்

# மகா கும்பமேளா: திரிவேணி சங்கமத்தில் இதுவரை 29 கோடி பேர் புனித நீராடல்

சென்னை, 01 பிப்ரவரி 2025: மகா கும்பமேளாவிற்கு இதுவரை சுமார் 29 கோடிக்கும் மேற்பட்டோர் வருகை தந்து திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

உத்தரபிரதேசத்தில் மகா கும்பமேளா நிகழ்ச்சி கடந்த 13ந்தேதி தொடங்கியது. பிப்ரவரி 26ந்தேதி வரை 45 நாட்கள் மகா கும்பமேளா நிகழ்ச்சி நடைபெற உள்ளது. இதற்காக 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

இந்நிலையில் இதுவரை சுமார் 29 கோடிக்கும் மேற்பட்டோர் கும்பமேளாவிற்கு வருகை தந்து, திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர். மகா கும்பமேளாவுக்கு இந்த வருடம் சுமார் 45 கோடி பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, தை அமாவாசையையொட்டி கடந்த 29ம் தேதி அதிகாலையில் திரிவேணி சங்கமத்தில் நீராட 7 கோடியே 64 லட்சம் பேர் திரண்டனர். சிலர் தடுப்புகளை தாண்டி குதித்து சென்றதால் ஏற்பட்ட தள்ளு முள்ளு மற்றும் நெரிசல் காரணமாக கர்நாடக மாநிலத்தை சேர்ந்த 4 பேர், மேற்கு வங்காளத்தை சேர்ந்த 2 பெண்கள் உள்பட 30 பக்தர்கள் பலியானார்கள். மேலும் 60 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்களில் 36 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

உயிரிழந்தவர்களின் குடும்ப ங்களுக்கு தலா ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்கப்படும். விபத்து குறித்து நீதி விசாரணை நடத்தப்படும் என்று முதல்வர் யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார். அவரது உத்தரவின்பேரில் பிரயாக்ராஜில் தலைமைச் செயலர் மனோஜ் குமார் சிங், டிஜிபி பிரசாந்த் குமார் ஆகியோர் நேற்று ஆய்வு நடத்தினர்.

# யமுனை நதி விவகாரம்: தேர்தல் ஆணைய அலுவலகத்தில் ஆஜரான கெஜ்ரிவால்



சென்னை, 01 பிப்ரவரி 2025: யமுனை நதி நீர் விவகாரம் குறித்து தேர்தல் ஆணையம் அனுப்பிய நோட்டீசுக்கு பதிலளிக்க ஆம் ஆத்மி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் இன்று தேர்தல் ஆணைய அலுவலகத்தில் ஆஜராகியுள்ளார்.

டெல்லிக்கு தண்ணீர் வழங்கும் யமுனை நதியில் அரியாணா மாநிலம் விஷத்தை வெளியேற்றுவதாகவும் அமோனியா எனப்படும் விஷம் கலந்திருப்பதை உறுதிப்படுத்தியதாகவும் கெஜ்ரிவால் கருத்து தெரிவித்திருந்தார்.

இதற்கு பிரதமர் மோடி, அரியாணா முதல்வர் நைப் சிங் சைனி உள்ளிட்ட பா.ஜ.க. தலைவர்கள் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் விஷம் கலப்பதாகப் பொய் கருத்து தெரிவித்து டெல்லி மற்றும் அரியாணா மக்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியதாக கெஜ்ரிவால் மீது அரியாணா அரசு சோனிபட் நீதிமன்றத்தில் நேற்று வழக்கு தொடர்ந்தது. தேர்தல் ஆணைய அலுவலகத்திற்குச் செல்வதற்கு முன்பு, கெஜ்ரிவால் செய்தியாளர்களிடம் கூறுகையில், தேர்தல் ஆணையம் ஏற்கனவே தங்கள் நடவடிக்கையை முடிவு செய்துவிட்டதைக் குறிக்கிறது.

ஆம் ஆத்மி கட்சி தனது குரலை உயர்த்தியதற்காகத் தேர்தல் ஆணையம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. டெல்லி தேர்தலின்போது ஆம் ஆத்மி கட்சி குறித்து அவதூறு பரப்ப அதிக அமோனியா கலந்த விஷ குடிநீரை மக்களுக்கு வழங்குகின்றனர். இதுவும் ஒரு அரசியல் சதி தான் என்று அவர் கூறினார்.

எங்கள் போராட்டம் வெற்றி பெற்றதற்கும், ஜனவரி 26 -27 முதல் யமுனையில் 7 பிபிஎம் ஆக இருந்த அமோனியா அளவு இப்போது 2 ஆக குறைந்ததற்கும் டெல்லி மக்களுக்கு நான் நன்றி தெரிவிக்கிறேன்.

டெல்லியில் இனப்படுகொலை செய்ய பாஜக அரசு யமுனை நீரில் "விஷத்தை" கலந்ததாக அவர் கூறிய குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கக் கோரி தேர்தல் ஆணையம் அவருக்கு இரண்டு நோட்டீஸ்களை அனுப்பியது.

இந்த நோட்டீஸுக்கு பதிலளிக்க தேர்தல் ஆணையத்தில் நேரில் ஆஜராகக் கோரி தேர்தல் ஆணையம் சம்மன் அனுப்பிய நிலையில் இன்று கெஜ்ரிவால் தேர்தல் ஆணைய அலுவலகத்தில் ஆஜராகி உள்ளார். டெல்லி முதல்வர் அதிஷி மற்றும் பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் ஆகியோரும் கெஜ்ரிவாலுடன் இருந்தனர்.

# உடல் பருமனை தடுக்கவும், எண்ணெய் பயன்பாட்டைக் குறைக்கவும் பிரதமர் விடுத்த அழைப்புக்கு மருத்துவர்கள், விளையாட்டு வீரர்கள் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்



சென்னை, 01 பிப்ரவரி 2025: பிரதமர் திரு நரேந்திர மோடி அண்மையில் உடல் பருமனை எதிர்த்துப் போராடவும் எண்ணெய் பயன்பாட்டைக் குறைக்கவும் ஒரு தெளிவான அழைப்பை விடுத்திருந்தார். இதற்கு மருத்துவர்கள், விளையாட்டு வீரர்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த மக்களிடமிருந்து பரவலான ஆதரவு கிடைத்துள்ளது.

டேராடூனில் நடைபெற்று வரும் 38-வது தேசிய விளையாட்டுப் போட்டியின் தொடக்க விழாவில் உரையாற்றிய பிரதமர், நாட்டில் உடல் பருமன் பிரச்சினை எவ்வாறு வேகமாக அதிகரித்து வருகிறது என்பது குறித்து எடுத்துரைத்தார்.

இது கவலைக்குரிய விஷயம் எனவும், இது உடல் பருமன் நீரிழிவு, இதய நோய் போன்ற நோய்களின் அபாயத்தை அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறியிருந்தார். உடல் திறன் இந்தியா இயக்கம் பற்றிப் பேசுகையில், சமச்சீரான உணவில் கவனம் செலுத்துவதுடன் உடற்பயிற்சியின் முக்கியத்துவம் குறித்தும் அவர் பேசினார். உணவில் ஆரோக்கியமற்ற கொழுப்பு, எண்ணெய் பொருட்கள் ஆகியவற்றைக் குறைப்பதன் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக் காட்டினார். மேலும் தினசரி எண்ணெய் பயன்பாட்டை 10% குறைக்க வேண்டும் என்ற புதிய ஆலோசனையையும் அவர் வழங்கினார்.

நடிகர் அக்ஷய் குமார் பிரதமரின் ஆலோசனையைப் பாராட்டி, நல்ல ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளார்.

பிரதமரின் தெளிவான அழைப்பை ஆதரிக்கும் வகையில், சுகாதார துறையினர் கருத்துகளை தெரிவித்துள்ளனர். உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசிய பிரிவு, சீரான சத்தான உணவுக்கான பிரதமரின் அழைப்பை பாராட்டியுள்ளது.

பி.டி. இந்துஜா மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி கௌதம் கன்னா, உடல் பருமனைக் குறைப்பதன் முக்கியத்துவம் குறித்தும், அதனுடன் தொடர்புடைய ஆபத்துகள் குறித்தும் சரியான நேரத்தில் பிரதமர் எடுத்துரைத்திருப்பதாக கூறியுள்ளார்.

மகாஜன் இமேஜிங் அண்ட் லேப்ஸ் நிறுவனத்தின் தலைவர் டாக்டர் ஹர்ஷ் மகாஜன், உடல் பருமனுக்கு எதிராகப் போராட பிரதமர் விடுத்த அழைப்புக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

உஜாலா சிக்னஸ் ஹெல்த்கேர் சர்வீசஸ் நிறுவனத்தின் நிறுவன இயக்குனர் டாக்டர் சுச்சின் பஜாஜ், உடல் பருமன் தீவிரமான சவால் என்றும், இதனை உடனடியாகவும், ஒன்றாக இணைந்தும் எதித்து போராட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

பல்வேறு மருத்துவர்களும் உடல் பருமன் அச்சுறுத்தலைத் தடுப்பதன் முக்கியத்துவத்தை ஆதரித்து கருத்துகளை தெரிவித்துள்னர்.

இந்திய பல் மருத்துவ சங்கம், டாடா மெமோரியல் மருத்துவமனை, தில்லி நாளமில்லா சுரப்பிகள் சங்கம் உள்ளிட்ட பல மருத்துவமனைகள், மருத்துவ அமைப்புகள், சங்கங்கள் போன்றவை உடல் பருமனுக்கு எதிரான இயக்கத்திற்கு ஆதரவளித்துள்ளன.

பிரதமர் விடுத்த அழைப்பை விளையாட்டு வீரர்களும் ஆதரித்துள்ளனர். சமச்சீர் உணவு, உடற்பயிற்சி, ஆரோக்கியம் ஆகியவை குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கிய இயக்கம் பாராட்டுக்குரியது என்று குத்துச்சண்டை வீரர் விஜேந்தர் சிங் கூறியுள்ளார்.

உடற்பயிற்சி பயிற்சியாளர் மிக்கி மேத்தா, உலக சாம்பியன்ஷிப் போட்டியின் வெண்கலப் பதக்கம் வென்ற குத்துச்சண்டை வீரர் கௌரவ் பிதுரி ஆகியோரும் பிரதமரின் இந்த முயற்சிக்கு ஆதரவு தெரிவித்துள்ளர்.